## விருதுநகர் சாத்தூர் - சின்னக்காமன்பட்டி

# பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 2-

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சின்னக்காமன்பட்டி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில்ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சின்னக்காமன்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (01.07.2025) காலை சுமார் 8.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் சிவகாசி வட்டம், மீனம்பட்டியைச் சேர்ந்த மகாலிங்கம் (வயது 55) த/பெ.ராமசாமி, அனுப்பன் குளத்தைச் சேர்ந்த செல்லப்பாண்டியன் த/பெ.சின்னையா, மத்திய சேனையைச் சேர்ந்த திருமதி.லட்சுமி க/பெ.கருப்பசாமி, விருதுநகர் வட்டம்,ஓ.கோவில்பட்டியைச் சேர்ந்த ராமமூர்த்தி

(வயது 38) த/பெ. ராம்ராஜ், சேர்வைக்காரன்பட்டியைச் சேர்ந்த ராமஜெயம் (வயது 27) த/பெ.கந்தசாமி மற்றும் சூலக்கரையை சேர்ந்த வைரமணி (வயது 32) த/பெ. காந்தி ஆகிய ஆறு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை வரும் லிங்குசாமி (வயது 45), மணிகண்டன் (வயது 40), கருப்பசாமி (வயது 27), திருமதி. முருகலட்சுமி (வயது 48) மற்றும் மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அழகுராஜா (வயது 28) ஆகிய ஐந்து நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.


இந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் கோவிந்தன்

### ஜூலை 2 (1991)



1937ஆம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உற்ற தோழனாக இருந்து இளமை மிடுக்கு மாறாமல், கழக அடலேறென அயர்வின்றி பணியாற்றியவர்.

1958ல் திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் 1962லிருந்து தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1967ல் சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும், 1969 பிப்ரவரி முதல் பேரவையின் தலைவராகவும் பொறுப்பேற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரும் போற்றும் வகையில் திறம்பட பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும் விழாவில் இவருக்கு “அண்ணா விருது” வழங்கி சிறப்பித்தார்.

“கழகத்தையும் பொதுப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு செயலாற்றிய அந்தச் செந்தமிழ் அறிஞரின் புகழ் என்றும் நிலைக்கும்!” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவரங்கம் க.இராசவேலு

### ஜூலை 2 (2013)



நீதிக்கட்சி குடும்பத்தைச் சேர்ந்த இவர், பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, பின்னர் கழகம் துவங்கப்பட்ட போதே, கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கியவர்.

திருவரங்கம் பகுதியில் கழகம் வளர பாடுபட்ட மூத்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

மதி எனும் இதழை நடத்தியும், நாடகங்கள் எழுதி அதில் நடித்தும், ‘செண்பகத் தமிழ் அரங்கு’ எனும் தமிழ் அமைப்பினை தொடங்கி, அதன் மூலம் ஆயிரக்கணக்கான தமிழிலக்கியக் கூட்டங்கள் நடத்தி தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றி அந்நகர வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் ரங்கநாதர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2010ல் தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு வழங்கும் விழாவில் ‘அகவை முதிர்ந்த தமிழறிஞர்’ எனும் விருதினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## நான் முதல்வன்:

# ஊக்கத் தொகை விண்ணப்பிக்க!

### காலக்கெடு நீடிப்பு!

சென்னை, ஜூலை 2-

2025ஆம் ஆண்டின் யு.பி.எஸ்.சி முதல்நிலை தேர்வில் (25.05.2025) தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக 25,000 ரூபாய் நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

இந்த ஊக்கத்தொகையைப் பெறுவதற்கான ஆன்லைன் விண்ணப்பம் மற்றும் அறிவிக்கை (Notification) https://portal.naanmudhalvan.tn.gov.in/upsc_registration/ என்ற இணையதளத்தில் கடந்த 21.06.2025, அன்று வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அறிவிக்கையின்படி ஆன்லைன் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 02.07.2025 ஆகும்.

இந்நேர்வில், பெரும்பாலான ஆர்வலர்கள் இருப்பிடச் சான்று / பிறப்பிடச் சான்று (Nativity Certificate) கோரி விண்ணப்பித்துள்ளதால், நான் முதல்வன் யு.பி.எஸ்.சி முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகைத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான காலக்கெடுவை நீட்டிக்க வேண்டி கோரிக்கைகள் எழுந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான காலக் கெடு 02.07.2025 லிருந்து 13.07.2025 வரை நீட்டிக்கப்படுகிறது.




கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திட்டக்குடி, விருத்தாச்சலம், நெய்வேலி, பண்ருட்டிதொகுதிகளின், BLA2 பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் 20.06.2025 காடாம்புலியூர் ஏவி மகாலில் நடைபெற்றது. மண்டல பொறுப்பாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலை வகித்தார். பண்ருட்டி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ, வரவேற்புரையாற்றினார், இந்நிகழ்வில் மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன், தொகுதி பொறுப்பாளர்கள் சுபா.சந்திரசேகரன் பா.துரைசாமி, செ.புஷ்பராஜ் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பாவாடை கோவிந்தசாமி, வி.கே.வெங்கட்ராமன், மாவட்ட பொருளாளர் ஜி.தண்டபாணி முன்னாள் எம்.எல்.ஏ. வி.டி.கலைச்செல்வன், முன்னாள் பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆர்..எஸ்.தணிகைச்செல்வன், ஆனந்தி சரவணன், நகர செயலாளர் க.இராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பாகமுகவர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. வழக்கறிஞர் அணிச் செயலாளர் என்.ஆர். இளங்கோ அறிவிப்பு !

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு, தி.மு.க. வழக்கறிஞர்அணி **கடலூர், திண்டுக்கல், கரூர், ஆவடி,** ஆகியமாநகரங்களின் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### கடலூர் கிழக்கு மாவட்டம்

#### கடலூர் மாநகரம்

தலைவர் - வி. திருவேங்கடராமன் 14, நாராயணன் நகர் திருபாப்புலியூர் கடலூர் - 2

துணைத் தலைவர் - மகேஷ் குமார் 19/45, ஜெகதேவ் நகர், மஞ்சக்குப்பம் கடலூர் - 1

அமைப்பாளர் - ஆர். பாபு எண்.7, ராஜா சாவடி செல்லங்குப்பம் கடலூர் ஒடி, கடலூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வி. ஹரிஹரன் 12, துரைசாமி நகர் ஆனைக்குப்பம் கடலூர் - 1 2) பி. மணிரத்தினம் 2, மாதா கோவில் தெரு செம்மண்டலம் கடலூர் -13) கே. ஆர். நிக்சன் 1, பகவாஹி அம்மன் கோவில் தெரு வில்வநகர் கடலூர் -14) புஷ்பராஜ் எண். 12/9, பகவான் மகாவீர் தெரு (ஜெயின் தெரு) கடலூர் ஒடி 5) எல். உஷா ராணி எண். 2/5, மிஷன் தெரு மஞ்சக்குப்பம் கடலூர் -1

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

#### திண்டுக்கல் மாநகரம்

தலைவர் - வி.சந்திரசேகரன் 67/1, காவேரிநகர் 2வது தெரு, நத்தம் ரோடு, திண்டுக்கல்

துணைத் தலைவர் - வி.என்.சிவக்குமார், 32, விவேகானந்தா நகர், திண்டுக்கல்.

அமைப்பாளர் - என்.ரமேஷ்குமார் 65,கல்ப விருக்சா கேட்வே, என்.ஜி.ஓ.காலனி, திருச்சி ரோடு, திண்டுக்கல்

துணை அமைப்பாளர்கள் - 1) என்.தர்மலிங்கம் 23, சிவகாமி இல்லம், டிரசரி காலனி, திண்டுக்கல். 2) ரா. விஜயலட்சுமி 2/128, குடித்தெரு, சீலப்பாடி அஞ்சல், திண்டுக்கல். 3) ஆ.மகேஷ் பிரகதா, 19, ஐஸ்வர்யா நகர், பாலகிருஷ்ணாபுரம் தெற்கு விஸ்தரிப்பு, திண்டுக்கல். 4) ப.திருமாறன், வள்ளுவர் காலனி, நந்தவனப்பட்டி, கரூர் ரோடு, திண்டுக்கல்.

### கரூர் மாவட்டம்

#### கரூர் மாநகரம்

தலைவர் - டி. ரவிக்குமார், 86, சீனிவாசபுரம், கரூர் அஞ்சல், கரூர் மாவட்டம்,

துணை தலைவர் - ஏ.பாண்டியன் எம்.ஐ.ஜி. 217, டி.என்.எச்.பி., வடக்கு காந்திகிராமம், கரூர் மாவட்டம்,

அமைப்பாளர் - கா.மகுடீஸ்வரன், 41எச்/5 - அன்பு நகர் முதல் தெரு, ராயனூர், கரூர் வட்டம், கரூர் - 639 003

துணை அமைப்பாளர்கள் - 1) இ.சண்முகசுந்தரம், என்.எஸ்.கே. நகர், வெங்கமேடு, கரூர் மாவட்டம் 2) ஆர். கிருபா, 1473/4, பாரதியார் 2வது தெரு, வடக்கு காந்திகிராமம், கரூர் மாவட்டம் 3) எஸ்.மணிவண்ணன் 41, அண்ணா நகர் 2வது தெரு தோரணக்கல்பட்டி, ராயனூர் கரூர் மாவட்டம் 4) ம.திருஞானம், 24/2 ஆண்டாள் நகர், வடக்கு தெரு, பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் -639004, 5) எம்.தனபால் 31/50, வடக்குதெரு பசுபதிபாளையம் கரூர் மாவட்டம்

### திருவள்ளூர் மத்திய மாவட்டம்

#### ஆவடி மாநகரம்

தலைவர் - ஆர். பிராங்கிளின் பேரின்பநாதன் எண். 7, கக்கன்ஜி தெரு, காந்தி நகர் பட்டாபிராம் சென்னை - 600 072

துணை தலைவர் - எம். தீனசீலன் எண்.2, கணேஷ் நகர் பாலவேடு, மிட்டினமல்லி ஆவடி, சென்னை - 600 055

அமைப்பாளர் - பி. ரமேஷ் எண்.10, வள்ளியம்மை தெரு சாஸ்திரி நகர், பட்டாபிராம் சென்னை - 600 072

துணை அமைப்பாளர்கள் - 1) ஜெ . ஜெயக்குமார் எண். 12 /6 , ராஜகோபால் தெரு சத்திரம், பட்டாபிராம் சென்னை - 600 072 2) வி . கார்த்திக் எண். 16, ஆதிபராசக்தி நகர் ஆவடி, சென்னை - 600 054 3) எம்.ஜி. ரமேஷ் எண். 7, 2 வது தெரு நவஜீவன் நகர், பட்டாபிராம் சென்னை - 600072 4) எ. அகஸ்டின் எண். 17/1, 2 வது தெரு ராமலிங்கபுரம் காமராஜர் நகர் சென்னை - 600071. 5) எம். கார்த்திக் எண். 28, வடக்கு மாட வீதி கோவில் பதாகை ஆவடி, சென்னை - 600 062.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 30-06-2025.

**என்.ஆர். இளங்கோ,**
செயலாளர்
தி.மு.க. வழக்கறிஞர் அணி

## தி.மு.க. மாணவர்அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம் !

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி -மாவட்ட பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் **விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் மத்திய** ஆகிய மாவட்டங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் - எஸ்.எஸ். அன்பழகன் எம்.ஏ., நெய்க்காரத் தெரு, திருவெண்ணெய் நல்லூர், விழுப்புரம்.

துணைஅமைப்பாளர்கள் - 1) த.அறிவழகன்எம்.ஏ., 3/87, மாரியம்மன்கோவில்தெரு, ஆற்காடு, கண்டாச்சிபுரம், விழுப்புரம். 2) ச.வினோத், பி.எஸ்சி., எண் 124, பெருமாள் கோவில்தெரு, பொன்னக்குப்பம், ஆசூர், விக்கிரவாண்டி, விழுப்புரம். 3) ஆ.சுஜித்ரா, பி.எஸ்சி, எண் 2/140, மாதாகோவில்தெரு, நரசின்ஹ்கனூர், வேம்பிஅஞ்சல், விக்கிரவாண்டி. விழுப்புரம். 4) த. இளவரசன்எல்.எல்.டி., 3-147, மேட்டுத் தெரு, நல்லாப்பாளையம்அஞ்சல் விக்கிரவாண்டி, விழுப்புரம். 5) ஏ.அருண்பி.ஏ. எல்.எல்.பி., பிள்ளையார் கோவில்தெரு, ஆவிக்கொளப்பாக்கம் திருக்கோவிலூர், விழுப்புரம்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

அமைப்பாளர் - பா.ஸ்ரீவினோத், எண், 422-சி, தெற்குரயில்வேகாலனி, விழுப்புரம்

துணை அமைப்பாளர்கள் - 1) தி.லெனின்விஜய்அமிர்தராஜ், எண் 20, சேவியர்தெரு, விழுப்புரம், 2) ர.பவானி, எண் 20-ஏ, ராஜீவ்காந்திநகர் கே.கே.ரோடு, விழுப்புரம் 3) ப.குணசேகரன், 11/79, சிவன்கோவில்தெரு, திருவக்கரைஅஞ்சல், வானூர், விழுப்புரம் 4) செ.வெற்றிகுருமூர்த்தி, மிட்டாமண்டகப்பட்டு கண்டமங்கலம், விழுப்புரம் 5) விஜெ.சூர்யா, 10/7, முத்துவேல் - லேஅவுட் கே.கே.ரோடு, விழுப்புரம் 6) மா.குடியரசு, மயிலம்மெயின்ரோடு, வானூர்அஞ்சல், விழுப்புரம்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 30-06-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி